# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1210**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

**58**

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

## சென்னையில் கண்ணகி திருவிழா!



ஓவியம் : ரவி பேலட்

*2001*-ஆம் ஆண்டின் இறுதியில், சென்னை மெரினா கடற்கரை சாலையில், கண்ணகி சிலையை அகற்றிய அந்த இடத்தில், மீண்டும் அமைக்கப்பட முடியாத வகையில், ஒரே நாளில் சாலை அமைக்கப்பட்டு போக்குவரத்தும் திறந்து விடப்பட்டது. சாலை அமைந்துவிட்டால், பிறகு சிலை வர முடியாது என்பதுதான் அம்மையாரின் நோக்கமாக இருந்தது. இதற்கிடையே கலைஞர் தொடங்கி வைத்த களப்போராட்டமும், சட்டப்போராட்டமும் அம்மையாருக்கு நெருக்கடிகளை அளிக்கத் தொடங்கின.

அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில்,'பொருந்தா காரணத்தைக் கூறி கண்ணகியின் சிலையை அகற்றியதற்கு' அனைத்துக்கட்சித் தலைவர்கள், தமிழ்ச் சான்றோர்கள், கவிஞர்கள், புலவர்கள், மகளிர் அமைப்புகள், மாணவ அமைப்பினர் அனைவரும் கடும் கண்டனம் தெரிவித்தனர். 'கண்ணகி சிலை நாட்டும் அறப் போராட்டக்குழு' அமைத்துப் போராட முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, கடற்கரையில் 05.01.2002 அன்று நடைபெற்ற கூட்டத்தில், 'தமிழர்களின் மானத்திற்கு விடப்பட்ட அறைகூவல்' என உணர்ச்சிமிக்க உரையாற்றினார் கலைஞர். “சிலையை உடனடியாக அதே இடத்தில் வைக்காவிட்டால், மானம் உள்ள தமிழர்களைத் திரட்டி மாபெரும் போராட்டம் நடத்தப்படும்” எனத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அறிவித்தார். சொன்னது போலவே, தொடர் கிளர்ச்சிகள், தொடர் வேண்டுகோள்கள் எனப் பல்வேறு அமைப்புகளின் சார்பாகத் தொடர்ந்து குரல் கொடுக்கப்பட்டது.

### வழக்கும் வலியுறுத்தல்களும்

கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவிட அரசுக்கு உத்தரவிட வேண்டும் என மத்திய சென்னை தி.மு. கழக வழக்கறிஞர்களின் பிரிவு துணை அமைப்பாளராக இருந்த வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். தமிழறிஞர்கள் டாக்டர் மா.நன்னன், வலம்புரி ஜான், வழக்கறிஞர் காந்தி ஆகியோர் சார்பில், தனித்தனியாக பொதுநல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

'கண்ணகி சிலையை முன்பு இருந்த இடத்திலேயே வைத்திட வேண்டும். இல்லையேல், தமிழர்கள் ஒன்றுபட்டு அரசுக்கு எதிராகப் பொங்கி எழுவார்கள்' என்று அப்போதைய முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்திற்கு மறைந்த இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் இராமதாசு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மறைந்த ஆர்.நல்லகண்ணு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மறைந்த என்.சங்கரய்யா, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மறைந்த ஈ.வெ.கி.ச.இளங்கோவன் எனப் பல கட்சித் தலைவர்களும் அறிக்கைகள் வழியாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கினர்.

இன்னொரு பக்கம், சென்னை பல்கலைக்கழக மாணவர்கள், கோவை, திருச்சி என தமிழ்நாடு முழுவதும் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினர். ஆசிரியர் சங்கங்களும் ஆர்ப்பாட்டத்தை அறிவித்தன. 'அரசியல் தலைவர்கள், தமிழறிஞர்களுடன், ஆசிரியர்களும் சேர்ந்து போராடுவர்' என்று ஆசிரியர் மன்றப் பொதுச் செயலாளர் மீனாட்சி சுந்தரம் அறிக்கை விடுத்தார். டாக்டர் மா.நன்னன், கவிக்கோ அப்துல் ரகுமான், சிலம்பொலி செல்லப்பனார், எஸ்.வி.ராஜதுரை, கவிஞர் வைரமுத்து உள்ளிட்ட தமிழறிஞர்கள் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டார்கள். பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றம், தமிழகப் புலவர் குழு, தமிழ்ச் சான்றோர் பேரவை எனப் பல தமிழறிஞர்கள் அமைப்புகளும் கண்டனங்களைத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் இறங்கின.

### வேறு இடத்தில் நிறுவலாம்...

கழகத்தின் வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா உள்ளிட்ட நால்வரது வழக்குகளும் சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி சுபாஷன் ரெட்டி மற்றும் நீதிபதி முருகேசன் அமர்வில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது, நீதிமன்றத்தில் பதிலளித்த அம்மையார் அரசு, 'புயலால் வீசிய சூறாவளி மற்றும் கனமழை காரணமாக கண்ணகி சிலை மற்றும் பீடம் சேதமடைந்த நிலையில், சாலை விபத்தில் சிலையின் பீடம் சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. சிலை கீழே விழுந்து பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே, சிலையை அங்கிருந்து அரசு அகற்றியது. சிலையை அகற்றியதில், வேறு எந்த உள்நோக்கமும் கிடையாது. இந்தப் பிரச்சினையை, அரசியலாக்க மனுதாரர்கள் முயல்கின்றனர்' என வாதிட்டனர்.

தவிர, சிலையை மீண்டும் அதே இடத்தில் வைக்க வேண்டும் என்று மனுதாரர்கள் கோர முடியாது. அதற்கு சட்டத்தில் இடமில்லை என்றும் கூறியதுடன், 'சென்னைப் பல்கலைக்கழக வளாகம், இராணி மேரி கல்லூரி வளாகம், மாநிலக் கல்லூரி வளாகம் மற்றும் மாதிரிப் பள்ளி வளாகம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு இடத்தில் கண்ணகி சிலையை வைக்கத் தயாராக உள்ளோம். குறிப்பாக, மாநிலக் கல்லூரி வளாகத்தில் சிலையை நிறுவுவது பொருத்தமாக இருக்கும்' என்று, அரசு சார்பில் அளிக்கப்பட்ட அறிக்கையில் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. கண்ணகி சிலையை மீண்டும் முன்பிருந்த இடத்திலேயே வைக்க முடியாது என்பதுதான் அம்மையார் அரசின் முடிவாக இருந்தது. உத்தரவு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், கடும் எதிர்ப்புகளுக்கிடையே கடற்கரையில் வேறு ஓர் இடத்தில் கண்ணகி சிலை நிறுவப்படும் என்றும் அறிவித்தது அம்மையார் அரசு. எனினும், சிலையை மீண்டும் நிறுவவே இல்லை.

> உலகத்தமிழ் மாநாட்டின்போது, ஆசிரியர்களும் மாணவர்களும் வசூலித்துக் கொடுத்து, அந்த நிதியிலே நிறுவப்பட்டதுதான் அந்தக் கண்ணகி சிலை.

கண்ணகி சிலையை, மீண்டும் அதே இடத்தில் நிறுவுவதில் கலைஞர் உறுதியாக நின்றார். ஏன் என்றால், 1968-ஆம் ஆண்டில் அந்தச் சிலை அவருடைய தலைமையில் திறக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது நடத்தப்பட்ட உலகத்தமிழ் மாநாட்டின்போது, ஆசிரியர்களும் மாணவர்களும் வசூலித்துக் கொடுத்து, அந்த நிதியிலே நிறுவப்பட்டதுதான் அந்தக் கண்ணகி சிலை. “அண்ணா அவர்களுடைய எண்ணப்படி, நான் தலைமையேற்க, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் திறந்து வைத்த சிலை. அங்கே 'கண்ணகி திருவிழா' நடைபெற்றது” என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் கலைஞர்.

...தொடரும்

## அச்சத்தில் தமிழ்நாட்டு மக்கள்!

தமிழ்நாட்டில் புதிய அரசு அமைந்த பிறகு, 2 வாரங்களில் 25 கொலைகள், 4 இரட்டைக் கொலைகள், 19 பாலியல் குற்றங்கள் நடந்திருக்கின்றன. சட்டம் - ஒழுங்கு ஒட்டுமொத்தமாக சீர்குலைந்திருப்பதைக் கண்டித்து, சமூக வலைதளங்களில் ஆயிரக்கணக்கானோர் கவலை தெரிவித்து, அரசுக்குக் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக, பதிவிட்டுள்ள பதிப்பாளர் கவிஞர் தம்பி, “பொதுவாக, ஒரு புதிய அரசு அமைந்தால், அவர்கள் செய்கிற முதல் வேலையே சட்டம் ஒழுங்கைக் கட்டுக்குள் கொண்டுவருவதுதான். காவல்துறையின் கண்காணிப்பில் உள்ள, அடிக்கடி குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள், எச்சரிக்கப்படுவார்கள். சிறுசிறு திருட்டு வழக்குகளில் தொடர்புடைய அவர்களும் கொஞ்சநாளைக்கு எவ்வித செயல்களிலும் ஈடுபட மாட்டார்கள். இது எப்போதுமே வழக்கமான நடைமுறை. ஆளும் தரப்பில் இருந்து, 'இரும்புக்கை கொண்டு அடக்கப்படும்' போன்ற அறிக்கைகள் வரும்.

தனிப்பட்ட நபர்களுக்கு இடையேயான வாய்க்கால் வரப்புத் தகராறுகள் கொலைகளில் முடிவதற்கு, எந்த அரசும் எதுவும் செய்ய முடியாது. கூலிப்படைக் கொலைகளுக்கு மட்டுமே நாம் நேரடியாக அரசின் சட்டம் ஒழுங்கைக் குறை சொல்ல முடியும். காமராசர், அண்ணாவுக்குக் கொடுத்த ஆறுமாத காலமும், மு.க.ஸ்டாலின் விஜய்க்குக் கொடுத்துள்ள ஆறுமாத கால அவகாசமும் நிர்வாகத்தைப் பற்றிய புரிதல் வருவதற்குத்தான். இதற்கும் சட்ட ஒழுங்கிற்கும் சம்பந்தம் இல்லை.

இந்தப் பத்து நாட்களில் நடந்த கொலை உள்ளிட்ட சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட செயல்களில் ஈடுபட்ட பெரும்பாலானோர் இளம்வயதினர். த.வெ.க. பதவியேற்றது முதல், மாமூல் கேட்பது, ஆய்வு செய்கிறேன் என்பது வரையிலான மனநிலையின், வேறொரு தீவிர வடிவமே இந்தக் கொலைகள். எதிர்பாராத இந்த வெற்றிப் பலருக்கு போதையைக் கொடுத்துள்ளது. அந்தப் போதையின் வெளிப்பாடுகளின் ஒரு பகுதி இவை. மேற்கண்ட வரிகள் பலருக்கு ஆத்திரத்தைக் கொடுக்கலாம். ஆனால், கீழ்மட்டத்தில் இந்த வெற்றியின் உணர்வெழுச்சி அப்படித்தான் இருக்கிறது.

10 வயது சிறுமியின் கொலை தொடர்பாக, செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொள்ளும் காவல்துறை அதிகாரியில் இருந்து அமைச்சர் வரை உடல்மொழியில் வெளிப்படும் அலட்சியத்தன்மை, அருவருப்பைக் கொடுக்கிறது. நாளுக்கு நாள் அதிகரிக்கும் இந்த எண்ணிக்கை எதிர்காலம் குறித்த அச்சத்தை, எல்லோரிடமும் ஏற்படுத்தி இருக்கிறது” எனக் கூறியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



இரா.முகுந்தன்



### டெல்லியில், தலைவருடன் 39 எம்.பி.க்கள்!

2006-ஆம் ஆண்டு நவம்பரில், அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் டெல்லி வந்தபோது, அவருக்கு 'தில்லித் தமிழ்ச் சங்கம்' சார்பில், நாங்கள் சிறப்பான வரவேற்பு அளித்தோம். டெல்லியில் வாழும் தமிழர்களின் நலன், தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துதல் குறித்து, நடைபெற்ற தில்லித் தமிழ்ச் சங்கத்தின் நிகழ்ச்சியில் கலைஞர் பங்கேற்றார். அப்போது, தில்லித் தமிழ்ச் சங்கத்துக்கான இணையதளப் பக்கத்தைத் தொடங்கி வைத்து வாழ்த்தினார். நிகழ்ச்சியில், அன்றைய தமிழ்நாடு அமைச்சர் துரைமுருகன், ஒன்றிய அமைச்சர்கள் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன், ஆ.ராசா உள்பட தமிழ்நாட்டைச் சேர்ந்த 39 எம்.பி.க்களும் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

**- இரா.முகுந்தன்,**
**முன்னாள் பொதுச் செயலாளர், தில்லித் தமிழ்ச் சங்கம்,**
**அனைத்திந்திய தமிழ்ச் சங்கப் பேரவை,**
**டெல்லி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## மலரும்... நல்லூருக

## 'அறிவாலயம்' பெயர் வரலாறு!

23.01.1948 அன்று 'திராவிட நாடு' இதழில் உலகின் மிகப் பெரிய நூலகத்தை 'அறிவாலயம்' எனத் தலைப்பிட்டு, சிறிய கட்டுரை ஒன்றை எழுதினார் பேரறிஞர் அண்ணா. அதன் அடிப்படையில்தான் பின்னாளில், தேனாம்பேட்டையில் அமைந்த கழகத் தலைமையகத்திற்கு 'அண்ணா அறிவாலயம்' எனப் பெயர் சூட்டினார் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900